ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 10.6 – அருள் பெறுவார்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 10.6 – அருள் பெறுவார்

‡ அருள் பெறுவார் அடியார் தம் ⋆
அடியனேற்கு ⋆
ஆழியான் அருள் தருவான் அமைகின்றான் ⋆
அது நமது விதி வகையே ⋆
இருள் தருமா ஞாலத்துள் ⋆
இனிப் பிறவி யான் வேண்டேன் ⋆
மருள் ஒழி நீ மட நெஞ்சே ! ⋆
வாட்டாற்றான் அடி வணங்கே ‖ **10.6.1** ‖

வாட்டாற்றான் அடி வணங்கி ⋆
மா ஞாலப் பிறப்பறுப்பான் ⋆
கேட்டாயே மட நெஞ்சே ! ⋆
கேசவன் எம் பெருமானைப் ⋆
பாட்டாய பல பாடிப் ⋆
பழ வினைகள் பற்றறுத்து ⋆
நாட்டாரோடியல்வொழிந்து ⋆
நாரணனை நண்ணினமே ‖ **10.6.2** ‖

நண்ணினம் நாராயணனை ⋆
நாமங்கள் பல சொல்லி ⋆
மண் உலகில் வளம் மிக்க ⋆
வாட்டாற்றான் வந்தின்று ⋆
விண் உலகம் தருவானாய் ⋆

விரைகின்றான் விதி வகையே ⋆
எண்ணின ஆறாகா ⋆
இக்கருமங்கள் என் நெஞ்சே ! ‖ **10.6.3** ‖

என் நெஞ்சத்துள் இருந்து ⋆
இங்கிரும் தமிழ் நூல் இவை மொழிந்து ⋆
வன்னெஞ்சத்திரணியனை ⋆
மார்விடந்த வாட்டாற்றான் ⋆
மன் அஞ்சப் பாரதத்துப் ⋆
பாண்டவர்க்காப் படை தொட்டான் ⋆
நல் நெஞ்சே ! நம் பெருமான் ⋆
நமக்கருள் தான் செய்வானே ‖ **10.6.4** ‖

வான் ஏற வழி தந்த ⋆
வாட்டாற்றான் பணி வகையே ⋆
நான் ஏறப் பெறுகின்றேன் ⋆
நரகத்தை நகு நெஞ்சே ⋆
தேன் ஏறு மலர்த் துளவம் ⋆
திகழ் பாதன் ⋆
செழும் பறவை தான் ஏறித் திரிவான் தன் ⋆
தாள் இணை என் தலை மேலே ‖ **10.6.5** ‖

தலை மேல தாள் இணைகள் ⋆
தாமரைக் கண் என் அம்மான் ⋆
நிலை பேரான் என் நெஞ்சத்து ⋆
எப்பொழுதும் எம் பெருமான் ⋆
மலை மாடத்தரவணை மேல் ⋆
வாட்டாற்றான் ⋆

மத மிக்க கொலை யானை மருப்பொசித்தான் ⋆
குரை கழல்கள் குறுகினமே ॥ **10.6.6** ॥

குரை கழல்கள் குறுகினம் ⋆
நம் கோவிந்தன் குடி கொண்டான் ⋆
திரை குழுவு கடல் புடை சூழ் ⋆
தென் நாட்டுத் திலதம் அன்ன ⋆
வரை குழுவு மணி மாட ⋆
வாட்டாற்றான் மலர் அடிமேல் ⋆
விரை குழுவு நறும் துளவம் ⋆
மெய்ந் நின்று கமழுமே ॥ **10.6.7** ॥

மெய்ந் நின்று கமழ் துளவ ⋆
விரை ஏறு திருமுடியன் ⋆
கைந் நின்ற சக்கரத்தன் ⋆
கருதும் இடம் பொருது புனல் ⋆
மைந் நின்ற வரை போலும் ⋆
திரு உருவ வாட்டாற்றாற்கு ⋆
எந் நன்றி செய்தேனா ⋆
என் நெஞ்சில் திகழ்வதுவே ॥ **10.6.8** ॥

திகழ்கின்ற திருமார்பில் ⋆
திருமங்கை தன்னோடும் ⋆
திகழ்கின்ற திருமாலார் ⋆
சேர்விடம் தண் வாட்டாறு ⋆
புகழ் நின்ற புள் ஊர்தி ⋆
போர் அரக்கர் குலம் கெடுத்தான் ⋆

இகழ்வின்றி என் நெஞ்சத்து ⋆
எப்பொழுதும் பிரியானே ॥ **10.6.9** ॥

பிரியாதாட்செய் என்று ⋆
பிறப்பறுத்தாள் அறக் கொண்டான் ⋆
அரி ஆகி இரணியனை ⋆
ஆகம் கீண்டான் அன்று ⋆
பெரியார்க்காட் பட்டக்கால் ⋆
பெறாத பயன் பெறும் ஆறு ⋆
வரி வாள் வாய் அரவணை மேல் ⋆
வாட்டாற்றான் காட்டினனே ॥ **10.6.10** ॥

‡ காட்டித் தன் கனை கழல்கள் ⋆
கடு நரகம் புகல் ஒழித்த ⋆
வாட்டாற்றெம் பெருமானை ⋆
வளங்குருகூர்ச் சடகோபன் ⋆
பாட்டாய தமிழ் மாலை ⋆
ஆயிரத்துள் இப்பத்தும் கேட்டு ⋆
ஆரார் வானவர்கள் ⋆
செவிக்கினிய செஞ்சொல்லே ॥ **10.6.11** ॥

அடிவரவு — அருள் வாட்டாற்றான் நண்ணினம் என்னெஞ்ச வானேற தலை குரைகழல் மெய்ந்நின்று திகழ்கின்ற பிரியாது காட்டி செஞ்சொல்

அருள் பெறுவார் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்